புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com



ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2054 • ஜனவரி 11, 2024 • புரட்சி 23 • முழக்கம் 52 • விலை ரூ.3.00

### 2014ஆம் ஆண்டில் “முழக்கம்” உமாபதி மூர்க்கத்தனமாக தாக்கப்பட்ட வழக்கு

# குற்றமிழைத்த போலீசார் மீது சி.பி.சி.ஐ.டி. விசாரணை

## சென்னை உயர்நீதிமன்றம் அதிரடி உத்தரவு

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவர் மேதகு பிராபகரன் அவர்களின் 60-வது பிறந்தநாளையொட்டி, 2014-ஆம் ஆண்டு நவம்பர் 26-ஆம் தேதி சென்னை மயிலாப்பூர் பகுதி கழகத் தோழர்களும், பொதுமக்களும் இணைந்து கொண்டாட்ட நிகழ்வுக்கு தயாராகினர். E-4 அபிராமபுர காவல் நிலைய அதிகாரிகள் இதற்கு எதிர்ப்பு தெரிவித்ததால், மயிலாப்பூர் பகுதி மக்கள் காவல்துறையை கண்டித்து சாலை மறியலில் ஈடுபட முற்பட்டனர். தகவல் அறிந்து செய்தி சேகரிக்க அங்கு சென்ற “பெரியார் முழக்கம்” நிருபர் உமாபதி. போராட்டத்தில் ஈடுபட்டிருந்த பெண்களிடம் போலீசார் அத்துமீறி நடந்துகொண்டதை தன்னுடைய கைபேசியில் படம்பிடித்துக்கொண்டிருந்தார். காவல் நிலைய அதிகாரிகள் இளையராஜா, வடிவேலு, கலைச்செல்வி ஆகியோர் கைபேசியை பிடுங்க முற்பட்டனர். பெண்களிடம் தவறான முறையில் நடந்து கொண்ட போலீசாரின் அராஜகப் போக்கை நிருபர் உமாபதி கேள்வி கேட்டார். அப்போது நிருபர் என்றும் பாராமல் முழக்கம் உமாபதியை போலீசார் லத்தியால் கடுமையாகத் தாக்கத் தொடங்கினர். ஆபாச வார்த்தைகளால் திட்டியபடி, காவல்நிலையத்திற்கு தூக்கிச்சென்று அடித்துத் துன்புறுத்தி கடும் சித்ரவதை செய்தனர்.

உடல் முழுவதும் இரத்த காயங்களுடன் காணப்பட்ட முழக்கம் உமாபதியை, வெற்றுக் காகிதத்தில் கையெழுத்துப் பெற்றுக்கொண்டு ராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் அனுமதித்தனர். அதன்பிறகு மருத்துவர்களின் அறிவுரைப் படி மேல்சிகிச்சைக்காக இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டார். 26/11/2014 அன்று உள் நோயாளியாக அனுமதிக்கப்பட்ட அடுத்த நாளே, டிஸ்சார்ஜ் செய்யச் சொல்லி போலீசார் அழுத்தம் கொடுத்ததால், மருத்துவர்கள் முழக்கம் உமாபதிக்கு சரிவர சிகிச்சை அளிக்கவில்லை. உடனே உமாபதி உயர் நீதிமன்றத்தை அணுகியதால், நீதிமன்ற உத்தரவுப்படி டீன் தலைமையில் குழு அமைக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது. மேலும், சித்ரவதைக்கு உள்ளான உமாபதி மீதே, போலீசார் 2 குற்ற வழக்குகளையும் பதிவு செய்தனர். ஆனால் உமாபதி, தான் தாக்கப்பட்டதாகக் கொடுத்த புகாரில், தாமதமாகவே வழக்குப் பதிவுசெய்யப்பட்டது. பின்னர், சித்ரவதை செய்த அதிகாரிகள் மீது துறை ரீதியான விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது. அதனை விசாரித்த துணை ஆணையர் அதிவீரபாண்டியன், போலீசார் சித்ரவதை செய்யவில்லையென அறிக்கை கொடுத்து, துறைரீதியான விசாரணையை முடித்து வைத்தார்.



முழக்கம் உமாபதி





முழக்கம் உமாபதி தாக்கப்பட்ட நாளில் இருந்து வழக்கை இடைவிடாது நடத்தியவர் கழக வழக்கறிஞர் திருமூர்த்தி.

“சித்ரவதை செய்த போலீசார் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும், வழக்கு சி.பி.சி.ஐ.டி. விசாரணைக்கு மாற்றப்பட வேண்டும், உரிய இழப்பீடு வழங்க வேண்டும்” என 2014-ல் காவல்துறையின் சித்ரவதைக்குள்ளான முழக்கம் உமாபதி தொடர்ந்த நீதிப்பேராணை வழக்கு, சென்னை உயர்நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வந்தது. இந்த வழக்கில் தற்போது தீர்ப்பளித்துள்ள சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி ஜி.கே. இளந்திரையன், காவல்துறை சித்ரவதை இழைக்கவில்லை என துணை ஆணையர் அதிவீரபாண்டியன் கொடுத்த துறை ரீதியான விசாரணை அறிக்கையை ரத்து செய்து உத்தரவிட்டார்.

“துணை ஆணையர் பதவிக்கு குறையாமல் இருக்கும் ஒரு அதிகாரியை தமிழக டி.ஜி.பி அவர்கள் நியமித்து, 2 வாரங்களுக்குள் மீண்டும் துறை ரீதியான விசாரணை நடத்த வேண்டும். விசாரணை அதிகாரி 12 வாரங்களுக்குள் விசாரணையை முடித்து, கிழக்கு மண்டல இணை ஆணையரிடத்தில் விசாரணை அறிக்கையை சமர்ப்பித்து, பின்பு இணை ஆணையர் அடுத்த 4 வாரங்களுக்குள் இறுதி உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று உத்தர விட்டுள்ளார். மேலும், “போதுமான ஆதாரங்கள் இருந்தும், காவல் சித்ரவதை செய்த போலிசார் மீது துறை ரீதியான விசாரணையை நியாயமாக நடத்தாமல், குற்றமிழைத்தவர்களுக்கு சாதகமாக முடித்த, விசாரணை அலுவலரான இணை ஆணையர் அதிவீரபாண்டியன் மீது டி.ஜி.பி. ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்று நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.


மேலும், “குற்றமிழைத்த போலீசார் மீது உமாபதி கொடுத்த புகாரின் வழக்கு கோப்புகள், நியாயமான விசாரணை நடத்த வேண்டி, E-4 அபிராமபுர காவல் நிலையத்தினரிடமிருந்து சி.பி.சி.ஐ.டி. போலீசார் வசம் ஒப்படைக்கப்படுகிறது” எனத் தெரிவித்த நீதிபதி, “வழக்கு கோப்புகள் சி.பி.சி.ஐ.டி. போலீசாரிடம் உடனடியாக ஒப்படைக்கப்பட்டு, சி.பி.சி.ஐ.டி. போலீசார் 12 வாரங்களுக்குள் விசாரணையை முடித்து, இறுதி அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும்” என்றும் அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளார். அதுமட்டுமின்றி முழக்கம் உமாபதி மீது போடப்பட்ட 2 பொய் வழக்குகளையும் நீதிபதி ரத்து செய்து உத்தரவிட்டுள்ளார். கழக வழக்கறிஞர் தோழர் திருமூர்த்தியின் வலுவான வாதங்களால், முழக்கம் உமாபதி வழக்கில் நியாயமான தீர்ப்பு கிடைத்திருக்கிறது. 9 ஆண்டுகளுக்குப் பிறகு கிடைத்திருக்கிற இத்தீர்ப்பை வரவேற்பதுடன், சி.பி.சி.ஐ.டி. போலீசார் துறை ரீதியான விசாரணையை விரைந்து முடித்து, தவறிழைத்த காவல் அதிகாரிகள் மீது விரைவாக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று திராவிடர் விடுதலைக் கழகம் வலியுறுத்துகிறது.

### RSS-அய் அச்சுறுத்தும் 5M



சங் பரிவார் கும்பல்கள் தங்களது கொள்கை எதிரிகளை எப்படி எதிர்கொள்கிறார்கள் என்பதை வெளிச்சம் போட்டுக்காட்டுகிறது இந்நூல். திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் கருத்தரங்கு ஒன்றில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி பேசிய உரையுடன், தகவல்கள் சேர்க்கப்பட்டு நூல் வடிவம் பெற்றுள்ளது. சென்னை புத்தகக் காட்சியில் கருஞ்சட்டை பதிப்பகம் அரங்கு எண் 332-இல் இந்நூல் கிடைக்கும்.

### கழக வெளியீடுகள் கிடைக்குமிடம்





சென்னை புத்தகக் காட்சியில் திராவிடர் விடுதலைக் கழகத்தின் வெளியீடுகள் அனைத்தும் பெரியார் புக்ஸ்.காம் அரங்கு எண் 88-இல் கிடைக்கும்.

## தலையங்கம்

# ராமர் மண்ணும் ராமசாமி மண்ணும்

மோடி ஆட்சியில் தொழில்துறை மிகப்பெரிய வளர்ச்சி கண்டிருப்பதாக, சென்னை உலக முதலீட்டாளர் மாநாட்டில் பேசிவிட்டுச் சென்றிருக்கிறார் ஒன்றிய அமைச்சர் பியூஷ் கோயல். ஆனால் மோடி ஆட்சியின் முக்கியத்துவம் எதற்கு என்பதை "அயோத்தி" வெட்டவெளிச்சமிட்டுக் காட்டிக்கொண்டிருக்கிறது. அயோத்தியில் ராமர் கோயிலை திறப்பதற்கு நாள் குறித்துவிட்டார்கள். ஜனவரி 22-ஆம் தேதி குடமுழுக்கு நடத்தப்பட்டு, பிரதமர் நரேந்திர மோடி ராமர் சிலையை தொட்டு நிறுவப் போகிறார். அதைவைத்தே நாடாளுமன்றத் தேர்தலை வென்றுவிடலாம் எனக் கணக்குப் போட்டிருக்கிறது பாஜக. ஆனால் "சூத்திரர்கள் மசூதியை இடித்ததோடும், அந்த இடத்தில் இப்போது கோயிலைக் கட்ட கோடி கோடியாய் பணத்தையும் பொருளையும் கொட்டியதோடு நிறுத்திக்கொள்ள வேண்டும். அதுதான் சனாதன தர்மம். அதைவிடுத்து ராமர் சிலையை சூத்திரரான மோடி தொட்டு நிறுவ ஆசைப்படலாமா? சமூக ஒழுங்கு என்ன ஆவது?" என்ற தொனியில் குரல்கள் எழுந்திருக்கின்றன.

"பிரதமர் மோடி ராமர் சிலையை தொட்டு, நிறுவும்போது சங்கராச்சாரியான நான் அங்கே நின்று கைதட்ட வேண்டுமா? ராமர் கோயில் திறப்பு விழாவுக்கு செல்ல மாட்டேன். என்னுடன் 100 பேரை அனுமதித்தாலும் நான் செல்லப்போவதில்லை" என்று பகிரங்கமாகக் கூறியிருக்கிறார் ஒடிசாவில் உள்ள பூரி மடத்தின் நிச்சலானந்தா சரஸ்வதி. பூரி சங்கராச்சாரியாரின் பார்வையில் மோடி ஒரு சூத்திரர், எனவே அவர் ராமர் சிலையை தொடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதையே வேறு மொழியில் சொல்லியிருக்கிறார். ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு ஜனவரி 3-ஆம் தேதி இவர் அளித்திருக்கும் பேட்டியில், "சதுர்வர்ண அமைப்பு எப்படி இருக்க வேண்டுமென்று பகவத் கீதையில் கிருஷ்ண பரமாத்மா கூறியிருக்கிறார். வருணாசிரம அடிப்படையில் சமூகங்கள் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு வகுப்பும் திறமை, செயல்பாட்டின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஜாதி அமைப்பு இயற்கையோடு நெருங்கியத் தொடர்புடையது." என்றும் கூறியிருக்கிறார்.

அதுமட்டுமல்ல, இன்றைய நவீன சமூகத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கிற காவல்துறை முதல் பிரதமர் பதவி வரை எல்லாமே வருணாசிரம சமூகக் கட்டமைப்போடு தொடர்புடையதுதானாம். அவரவருக்கு கொடுக்கப்பட்ட வேலையை அவரவர் செய்ய வேண்டுமே தவிர, மற்றவர்கள் பணியில் குறுக்கிடக் கூடாது என்கிறார் பூரி சங்கராச்சாரியார். அதாவது சிலையை நிறுவுவது, குடமுழுக்கு செய்வது பார்ப்பனர்களின் வேலை, அதில் சூத்திரரான மோடிக்கு என்ன வேலை என்று மறைமுகமாகக் கேட்கிறார் அவர். வருணாசிரமக் கோட்பாட்டை நிலைநிறுத்தத் துடியாய் துடிக்கிற மோடியாய் இருந்தாலும், அவரை சூத்திரராகத்தான் பார்க்கிறது பார்ப்பனியம். ஆக, "இந்துக்களே ஒன்று கூடுங்கள்" என்று பார்ப்பனர்கள் பேசுவது, இங்கிருக்கிற பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களின் வாயிலாக தங்களுடைய மேலாதிக்கத்தை நிலைநிறுத்திக்கொள்ளத்தான் என்பதை தனது பேச்சின் மூலம் விளக்கியிருக்கிறார் பூரி சங்கராச்சாரியார்.

அதைப்பற்றியெல்லாம் பாஜகவில் இருக்கிற பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்டவர்களுக்கு எந்த கவலையும் இல்லை. மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தத் தவறியதன் விளைவாக, ஒன்றிய அரசின் வரிப் பகிர்வில் இருந்து அதிக வருவாயைப் பெறும் மாநிலமாக உத்தரப் பிரதேசம் இருக்கிறது. ஆனால் அந்த நிதியை முறையாகப் பயன்படுத்தாமல் கல்வி, மருத்துவம், சுகாதாரம், தொழில், உள்கட்டமைப்பு வளர்ச்சி, வாழ்வாதாரம், வறுமை ஒழிப்பு என எந்த புள்ளி விவரங்களை எடுத்தாலும் பின்வரிசையில்தான் இருக்கிறது உத்தரப் பிரதேசம். இன்னும் மின்சார இணைப்புகள் இல்லாத கிராமங்கள், சாலை வசதிகள் இல்லாத கிராமங்கள், 3 வேளை உணவுக்கு வழியில்லாத மக்கள் உத்தரப் பிரதேசத்தில் ஏராளம். ஆனால் அந்தத் தேவைகளை பூர்த்தி செய்ய ஆர்வம் காட்டாத பாஜக அரசு, ராமர் கோயில் கட்டப்படுகிறது என்ற ஒற்றை காரணத்திற்காக அயோத்திக்கு மட்டும் 15,000 கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சிப் பணிகளை முடுக்கி விட்டிருக்கிறது.

தேசிய நெடுஞ்சாலை ஆணையம் 10,000 கோடி ரூபாய்க்கு அயோத்தியில் சாலை மேம்பாட்டுப் பணிகளை தொடங்கியிருக்கிறது. 7,500 கோடி ரூபாயில் மாநில அரசும் சில பணிகளை மேற்கொண்டு வருகிறது. விமான நிலையங்கள், ரயில் நிலையங்கள் புதுப்பிக்கப்படவுள்ளன. அயோத்தியை அழகுபடுத்துதல், தூய்மைப்படுத்துதல், அணுகலுக்கு எளிமையாக்குதல், நவீனமாக்குதல், சுகாதாரக் கட்டமைப்புகளை பலப்படுத்துதல் என சகல வசதிகளும் கொண்ட நகரமாக மாறிக்கொண்டிருக்கிறது. மோடியின் 10 ஆண்டுகால ஆட்சியில் எந்த வளர்ச்சியும் இல்லை என்ற வாதத்தை முறியடிக்க, இதோ அயோத்தி வளர்ந்திருக்கிறதே என்று காட்டுவதற்கான பணிகள் இவை என்றும் கொள்ளலாம். அந்த மாநிலத்தின் மற்ற பகுதிகளைப் பற்றி சாமியார் ஆதித்யநாத்துக்கோ, பிரதமர் மோடிக்கோ என்ன கவலை?

அயோத்தியில் இத்தகைய கூத்துகள் அரங்கேறிக் கொண்டிருக்கும் வேளையில்தான் தமிழ்நாடு தொழில்வளர்ச்சியில் அடுத்தக்கட்ட பாய்ச்சலுக்கு தயாராகிக் கொண்டிருக்கிறது. ஜனவரி 7,8 ஆகிய தேதிகளில் சென்னையில் நடந்த உலக முதலீட்டாளர் மாநாட்டில் ரூ.6.64 லட்சம் கோடி மதிப்பிலான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியிருக்கின்றன. எல்லா மாவட்டங்களிலும் சரிசமமான வளர்ச்சியை சாத்தியப்படுத்தும் நோக்கையும் கருத்தில்கொண்டு இந்த புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியிருக்கின்றன. நேரடியாகவும் மறைமுகமாகவும் சேர்த்து 26.90 லட்சம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என்று அரசு உறுதி அளித்திருக்கிறது. தொழில் தொடங்குவதற்கு உகந்த மாநிலமாக, கட்டமைப்பு வளர்ச்சிகள் நிறைந்த மாநிலமாக தமிழ்நாடு இருக்கிறது என்று முதலீட்டாளர்களும் பாராட்டியிருக்கிறார்கள். இதுதான் ராமர் மண்ணுக்கும் ராமசாமி (பெரியார்) மண்ணுக்குமான வித்தியாசம்.

## வினா விடை

• *அயோத்தியில் ராமர் கோயில் திறக்கப்படும் நாளில் எல்லோரும் வீடுகளிலும் விளக்கேற்றுங்கள்- எல்.முருகன்*

***பதில்:*** *முன்பு கொரோனாவை விரட்ட விளக்கேற்றுங்கள் என்றார் மோடி, இப்போது ராமரை விரட்ட விளக்கேற்றச் சொல்கிறார்களோ!*

• *பெரியார் பல்கலைக்கழக துணைவேந்தர் கைது கண்டிக்கத்தக்கது, அமித் ஷா-வுக்கு கடிதம் அனுப்புவோம்- அண்ணாமலை*

***பதில்:*** *கைது செய்த காவல்துறையினர் வீட்டுக்கு அமலாக்கத்துறையை அனுப்ப வழி ஏதும் இருக்கிறதா என்று அமித் ஷாவிடம் கேட்டுப் பாருங்கள்!*

• *பாஜக அகில இந்தியத் தலைமையுடன் தொடர்பில் இருக்கிறேன்: ஓ.பன்னீர்செல்வம்*

***பதில்:*** *அந்தத் தொடர்பால்தான் உங்கள் அரசியல் வாழ்க்கை "ஜெயலலிதா இட்லி சாப்பிட்டார்" என்ற கதைபோல் ஆகிவிட்டது என்பதை மறந்துவிட வேண்டாம்.*

• *என்னைப் பார்க்க வரும் தொண்டர்கள் பூங்கொத்து கொடுக்க வேண்டாம், புத்தகங்கள் கொடுங்கள்: எடப்பாடி பழனிசாமி*

***பதில்:*** *வரவேற்க வேண்டிய அறிவிப்புதான்... ஆனால் சேக்கிழார் எழுதிய கம்பராமயணத்தை மட்டும் மீண்டும் படித்துவிட வேண்டாம்.*

• *சென்னை புறநகர் பேருந்து நிலையத்தை கோயம்பேட்டில் இருந்து கிளாம்பாக்கத்திற்கு மாற்றியது ஏன்?- சீமான்*

***பதில்:*** *அதிபர் ஆட்சி மலரும்போது (?) கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தை செல்லாது என அறிவித்து விடலாம், கவலைப்படாதீர்கள்.*

## "இஸ்ரேல் முதல் பாலஸ்தீனம்" வரை நூல் வெளியிட்ட கழகத் தலைவர்




*எழுத்தாளர் விஜயபாஸ்கர் புதிதாக எழுதியுள்ள "பாலஸ்தீனம் முதல் இஸ்ரேல் வரை - ஒரு வரலாற்றுச் சுருக்கம்" நூலை சென்னை புத்தகக் காட்சியில் பெரியார் புக்ஸ்.காம் அரங்கில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி வெளியிட கருப்புப் பிரதிகள் நீலகண்டன், பத்திரிகையாளர் நீரை.மகேந்திரன் ஆகியோர் பெற்றுக்கொண்டனர். எழுத்தாளர் விஜயபாஸ்கர் "உயர்ஜாதியினருக்கு EWS இடஒதுக்கீடு சரியா? தவறா?" என்ற நூலை தொகுத்து கவனம் ஈர்த்தவர். நிகழ்வில் அற்புதம்மாள், கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், கழக இணையதளப் பொறுப்பாளர் விஜயகுமார், பத்திரிகையாளர் ர.பிரகாசு, அன்னூர் விஷ்ணு உள்ளிட்டோர் பங்கேற்றனர்.*

## ஏற்காட்டில் கலந்துரையாடல் கூட்டம்




*03.01.2024 புதன் அன்று காலை 11 மணியளவில் சேலம் கிழக்கு மாவட்ட அமைப்பாளர் ஏற்காடு பெருமாள் இல்லத்தில், ஏற்காடு ஒன்றியக் கழகக் கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு சேலம் கிழக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஏற்காடு தேவபிரகாஷ் தலைமை தாங்கினார், ஏற்காடு ஒன்றிய செயலாளர் கார்த்திகேயன் முன்னிலை வகித்தார். புதிதாக பரப்புரை வாகனம் வாங்குவது, பயிற்சி வகுப்புகள் நடத்துவது என கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. சுமார் 20 தோழர்கள் கலந்துகொண்டனர்.*

## சந்தாக்களை விரைந்து வழங்குவீர்!

வருகிற ஜனவரி 15 முதல் 2024ம் ஆண்டுக்கான "பெரியார் முழக்கம்" சந்தா புதுப்பிக்கப்பட உள்ளதால், கழகத் தோழர்கள் மாவட்ட வாரியாக புதிய சந்தாக்களை விரைவாக 8973341377 என்ற எண்ணிற்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.

விடுதலை இராசேந்திரன்,
ஆசிரியர், புரட்சிப் பெரியார் முழக்கம்



# பெரியாரை மீண்டும் மீண்டும் வாசிப்போம்

## ஆளூர் ஷா நவாஸ் எம்.எல்.ஏ

*(28.12.2023 இதழில் வெளியான கட்டுரையின் தொடர்ச்சி)*

ஒன்றிய அரசின் எந்தவொரு உயர் பொறுப்புகளிலும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, பழங்குடியின வகுப்புச் சார்ந்தவர்கள் கிடையாது என்று ஒன்றிய அரசே நாடாளுமன்றத்தில் கூறுகிறது. உச்சநீதிமன்றம், உயர்நீதிமன்றம், இராணுவம் என ஒன்றிய அரசின் அனைத்துத் துறைகளிலும் முற்பட்ட வகுப்பினர்தான் நிறைந்துள்ளனர். இந்த நாட்டின் அதிகாரம் முழுமைக்கும் இன்றைக்கு பார்ப்பனர்களின் கட்டுப்பாட்டில் சிக்கியுள்ளது. ஆங்கிலேயர்கள் இந்த நாட்டை விட்டு செல்லும்போது பெரியார் ஏன் இது உண்மையான விடுதலை கிடையாது, அதிகாரம் கைமாறி இருக்கிறது என்று கூறினார்? ஆங்கிலேயரிடமாவது நம் உரிமைகளைப் போராடி பெற்றுவிடலாம் என்று பெரியார் கூறினார்.

சுதந்தர நாளை துக்கநாளாக அறிவித்தவர் பெரியார். விடுதலை அடைந்து 75 ஆண்டுகளாகிறது. ஆனால் இன்னும் கல்விக்காக, வேலைவாய்ப்புகளுக்காக முட்டிமோதிக்கொண்டுதானே இருக்கிறோம். பிற்படுத்தப்பட்டவராக இருக்கும் மோடி பிரதமராக இருக்கும்போது பிற்படுத்தப்பட்டவர்களுக்கு மருத்துவ மேற்படிப்புகளில் இட ஒதுக்கீடு மறுக்கப்பட்டது. அதை எதிர்த்து உச்சநீதிமன்றம் வரை சென்று வழக்காடி வென்றது திமுக, விசிக உள்ளிட்ட தமிழ்நாட்டுக் கட்சிகள். ஆனால் இந்த பிற்படுத்தப்பட்டவரான மோடி ஆட்சியில் முற்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்களுக்கு 10 விழுக்காடு இட ஒதுக்கீடு எந்தவித போராட்டமுமின்றி கிடைத்தது. பிற்படுத்தப்பட்டவரான மோடிக்கு பிரதமர் பதவி என்பது அடையாளம், ஆனால் அதிகாரம் முழுவதும் பார்ப்பனர்களுக்கு. இதுதான் பாஜகவின் உண்மை முகம். இதைப் புரிந்துகொள்ள வேண்டும் என்றால் நமக்கு பெரியார் தேவைப்படுகிறார்.



தன்னுடைய அசல் எதிரியை அடையாளம் காட்டி விட்டுச் சென்றதுதான் பெரியாரின் பெரிய வெற்றி. வன்னியர்களுக்கும் தலித்களுக்கும் பிரச்சனை, முஸ்லிம்களுக்கும் இந்துக்களுக்கும் பிரச்சனை என்று சொல்கிறார்கள். ஒரு குடிமகனின் அதிகபட்ச கனவு தன் குழந்தையை நன்றாக படிக்கவைத்து, நல்ல வேலைக்கு அனுப்ப வேண்டும், இதுதான் இந்த நாட்டில் உள்ள கோடிக்கணக்கான மக்களின் கனவு. இந்த நாட்டிலுள்ள 100 கோடிக்கும் மேற்பட்ட இந்துக்களின் கல்விக்கும், வேலைவாய்ப்புகளுக்கும் எதிராக இருப்பது யார்? இஸ்லாமியர்களா? ஒரு இந்து உயர்நீதிமன்ற நீதிபதியாக ஆவதற்கு தடையாக இருப்பது யார்? இஸ்லாமியர்களா? ஒரு இந்துவின் கல்விக்கும், வேலைவாய்ப்புக்கும் இடையூறாக இல்லாத இஸ்லாமியர்கள் எப்படி இந்துக்களுக்கு எதிரியாக இருக்க முடியும்? அவர்கள் எதிரி அல்ல, இல்லாத ஒருவரை எதிரிகளாகக் காட்ட முற்படுகிறார்கள். ஆனால் பார்ப்பனரல்லாத மக்களின் உரிமைகளைப் பறித்துக்கொண்டிருக்கும் பார்ப்பனர்கள்தான் இந்துக்களின் அசல் எதிரி.

ஒரு பிற்படுத்தப்பட்டவருக்கு ஒரு தலித் எதிரியாக இருக்க முடியாது. ஏனென்றால் இவர்கள் இருவருடைய கனவும் கல்வி, வேலைவாய்ப்புகளை பெற்று முன்னேறுவதுதான். இருவருடைய உரிமைகளைப் பறித்தது யார்? பார்ப்பனர்கள். அதனால்தான் பெரியாரைக் கண்டால் அவர்களுக்கு பயம். இந்தியாவில் இருப்பதுபோல சாதிய இறுக்கம், வேறெந்த நாட்டிலும் கிடையாது, உலகத்தில் எங்கு வேண்டுமாலும் எந்தப் போராட்டத்தை வேண்டுமானாலும் நடத்திவிடலாம். ஆனால் இந்தியாவில் இந்த பார்ப்பன சக்திகளை எதிர்த்துப் போராடுவது என்பது கடினமானது. அதனால்தான் பெரியார் எந்த இடத்திலும் திசைமாறாமல் போராடினார். அப்படிப்பட்ட ஒரு மகத்தான ஒரு தலைவரைத் திரும்பத் திரும்ப நாம் நினைவுகூற வேண்டும். அவரை மீண்டும் மீண்டும் வாசிப்புக்கு உட்படுத்த வேண்டும். அவர் சொன்ன ஒவ்வொரு கருத்தையும் விவாதத்துக்கு உட்படுத்த வேண்டும். அந்த அளவுக்கு நாம் ஆழமாகப் பயணிக்க வேண்டியுள்ளது. பெரியாரை வீதிதோறும் எல்லா இடங்களிலும், எல்லா வடிவங்களிலும் கொண்டு சென்று நினைவுகூறுவோம்.

(நிறைவு)

# பேராபத்து சட்டங்களுக்காக ஜனநாயகப் படுகொலை

## எட்வின் பிரபாகரன்

வரலாற்றில் இல்லாத வகையில் இந்திய நாடாளுமன்றத்தில் 11 கட்சிகளின் 140 எம்.பி.க்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருப்பது மக்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியிருக்கிறது.மோடிக்கு எதிராக, நாட்டின் பாதுகாப்பு நலனைக் கருதி, பதாகைகளை ஏந்தி வந்ததற்காக இந்த அக்கிரம நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. INDIA கூட்டணியின் வளர்ச்சியை பொறுத்துக் கொள்ள முடியாமல், சங்கிகள் செய்த வெறிச்செயல் இதுவாகும். இனி நம்முடைய நாடாளுமன்றம் வடகொரிய நாடாளுமன்றத்தைப் போல இருக்கப் போகிறது என கார்த்தி சிதம்பரம் (காங்) விமர்சித்துள்ளார்.

எம்பிக்களை சஸ்பெண்ட் செய்துவிட்டு பல்வேறு சர்ச்சைக்குரிய மசோதாக்களை ஒன்றிய சனாதன அரசு, எந்த எதிர்ப்புக்கும் இடமின்றி நிறைவேற்றி உள்ளது. இதை மணிஷ் திவாரியும் (காங்) குறிப்பிட்டுப் பேசியுள்ளார். நாடாளுமன்ற ஜனநாயகத்துக்கு இரங்கல் உரை எழுத வேண்டிய நிலையில் இருக்கிறோம் என சசி தரூர் (காங்) கூறியிருப்பதும் கவனிக்கத்தக்கது. உண்மையை பேசுபவர்களையும் கேள்வி கேட்பவர்களையும் சஸ்பெண்ட் செய்துள்ளதாக சுஷில் குமார் ரிங்கு (ஆம்ஆத்மி) கண்டித்துள்ளார். தன்னுடைய கூர்மையான கேள்விகளால் பாஜகவினரை துளைத்து வந்த, திரிணாமுல் காங்கிரஸின் குரலான மகுவா மொய்த்ராவை, கற்பனையான காரணங்களுக்காக ஏற்கெனவே சஸ்பெண்ட் செய்திருந்தனர்.

நாடாளுமன்றத்தில் பாஜக உறுப்பினரிடம் (பிரதாப் சிம்கா) அனுமதிச்சீட்டை பெற்றுக்கொண்டு உள்நுழைந்த ஆறு பேர் கொண்ட கும்பல், புகை குண்டுவீசியதால்,நாடாளுமன்றம் அதிர்ந்தது.இந்த பாதுகாப்பு அச்சுறுத்தல் குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்க எதிர்க்கட்சியினர் அனுமதி கேட்டிருந்த நிலையில், அனுமதி மறுக்கப்பட்டது. இதனை எதிர்த்துப் போராடிய தேசப்பற்றாளர்களை, போலி தேசபக்தர்கள் இடைநீக்கம் செய்து, அம்பலப்பட்டு போயுள்ளனர். இந்திய தண்டனைச் சட்டம், குற்றவியல் நடைமுறைச் சட்டம், இந்திய ஆதாரச் சட்டம் ஆகியவற்றின் பெயர்களை பாரதிய நியாய சன்ஹிதா, பாரதிய நாகரிக் சுரக்ஷா, பாரதிய சாக்ஷயா என மாற்றி மசோதா கொண்டு வந்துள்ளனர். INDIA கூட்டணியின் பெயரால் எரிச்சலடைந்து, நாட்டின் பெயரையே "பாரத்" என்று ஆங்கிலத்திலும் மாற்றத் துணிந்து விட்டனர். திராவிட சிந்து சமவெளி நாகரிகத்தோடு தொடர்புடைய பெயர் "இந்தியா". பாரத் என்கிற புராணப் பெயரைக்காட்டிலும் இந்தியா என்பது பொருத்தமான பெயர்தான்.

எந்த வளர்ச்சி திட்டத்தையும் முறையாக செயல்படுத்தாமல், வெறும் பெயரை மட்டும் மாற்றிவிட்டால் காலனியாதிக்க மனநிலையில் இருந்து மக்கள் மீண்டு விடுவார்கள் என்கிறது சங் பரிவார் கூட்டம். தற்போது இருக்கும் 15 நாள் ரிமாண்ட் முறையை மாற்றி 60 அல்லது 90 நாட்கள் வரை கூட காவலில் எடுத்து விசாரிக்கும் வகையில் சட்டங்கள் திருத்தப்பட்டுள்ளன. நிரபராதிகளை குற்றவாளிகளாகக் கட்டமைக்க இந்த 15 நாட்களை சில நேர்மையற்ற காவல்துறை அதிகாரிகள் பயன்படுத்தி வரும் நிலையில், இதனை 60 நாளாகவோ 90 நாளாகவோ மாற்றுவது என்பது, காவல் கொட்டடி வன்முறைகளை அதிகரிக்கவே செய்யும். புதுச் சட்டங்களில் மரண தண்டனை முறை ஒழிக்கப்படுவதற்கு பதிலாக, அதிகரிக்கும்படியான திருத்தங்கள்தான் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வரவேற்கும்படியாக எதுவும் இல்லை.

அதேபோல, தேர்தல் ஆணையம் தொடர்பான எதேச்சதிகார மசோதாவையும் மோடி அரசு கொண்டுவந்துள்ளது. இதற்கு முன்பு வரை தேர்தல் ஆணைய அதிகாரிகளை தேர்ந்தெடுக்கும் பொறுப்பு பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி ஆகிய மூவர் குழுவின் கையில் இருந்தது. இக்குழுவில் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியை நீக்கிவிட்டு, அதற்கு பதிலாக கேபினட் அமைச்சர் ஒருவரை இணைத்துக் கொண்டு புதிதாக மூவர் குழுவை உருவாக்கும் மசோதாவாக இம்மசோதா உருவாக்கப்பட்டுள்ளது. இதில் மிகப்பெரிய பேராபத்து ஒளிந்துள்ளது. ஆளுங்கட்சியை சேர்ந்த இருவரையும் எதிர்க்கட்சியை சேர்ந்த ஒருவரையும் சேர்த்துக் கொண்டு ஒரு குழுவை அமைக்கும் பொழுது ஆளுங்கட்சியினர் தங்களுக்குச் சாதகமான ஒருவரை தேர்தல் ஆணையராக நியமிக்கும் அபாயம் உள்ளது. இதனால் இனிவரும் காலங்களில் தேர்தல்கள் நியாயமாக நடக்குமா? என்ற சந்தேகம் மனித உரிமையாளர்கள் மத்தியில் எழுந்துள்ளது. கடந்த மார்ச் மாதம் உச்ச நீதிமன்றம் வெளியிட்ட தீர்ப்புக்கு நேரெதிரான மசோதா இதுவாகும்.

2021 ஆம் ஆண்டிற்கான மக்கள்தொகைக் கணக்கெடுப்பையே இன்னும் எடுக்காமல், பெண்களுக்கான 33.33% இட ஒதுக்கீட்டு மசோதாவை அவசர கதியில் தேர்தல் உள்நோக்கங்களுடன் பாஜக ஏற்கனவே கொண்டு வந்திருந்தது. அது வெறும் ஏட்டளவில் மட்டுமே உள்ளது; நடைமுறைக்கு வரவில்லை. அரசுக்கு எதிரான கருத்துகளை சமூக வலைத்தளங்களில் இருந்து நீக்குவதற்கான தகவல் தொழில்நுட்பச் சட்டத்தையும் ஏற்கனவே கொண்டு வந்திருந்தது. அதேபோல வனப் பாதுகாப்பு சட்டத் திருத்தமும் சர்வதேச எல்லைப் பகுதிகளில் காடுகளை அழிப்பதற்கு ஏதுவாக உருவாக்கப்பட்டிருந்தது. அனைத்து மக்கள்விரோத சட்ட திருத்தங்களுக்கும் பழங்குடியின சமூகத்தில் பிறந்து குடியரசுத் தலைவர் ஆனவர் என்று போற்றப்படும் திரவுபதி முர்மு ஒப்புதல் வழங்கியுள்ளார்.

ஒருபுறம், தமிழ்நாடு அரசு சட்டமன்றத்தில் நிறைவேற்றும் மக்கள் நலன் சார்ந்த மசோதாக்களை, பழிவாங்கும் நோக்கத்தோடு ஆளுநர் கிடப்பில் போடும் நிலையில், மறுபுறம் டெல்லியில் தங்குதடையின்றி உரிமை பறிப்பு மசோதாக்கள் நிறைவேறுவது வருத்தத்திற்குரிய செய்தியாகும். எனவே, மக்கள் விரோத மசோதாக்கள் திரும்பப் பெறப்பட வேண்டும். 10% பேர் இருந்தாலே நாடாளுமன்றத்தை நடத்தலாம் என்ற விதியும் மாற்றப்பட வேண்டும். மத்தியில் ஆட்சி மாறாமல் எதுவும் மாறப்போவதில்லை."

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# பில்கிஸ் பானு வழக்கில் உச்சநீதிமன்றம் அதிரடி

குஜராத் கலவரத்தில் கூட்டுப் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளான பில்கிஸ் பானு வழக்கில் குற்றவாளிகளை முன்கூட்டியே விடுதலை செய்த குஜராத் அரசின் விடுதலை செல்லாது என்றும் அவர்களை மீண்டும் இரண்டு வார காலத்துக்குள் சிறைக்கு அனுப்ப வேண்டும் என்றும் உச்சநீதிமன்றம் 08.01.2024 அன்று அதிரடியான தீர்ப்பை வழங்கியுள்ளது.

அந்தத் தீர்ப்பில், குற்றவாளிகளின் விடுதலைக்கு பின்னால் இருக்கிற அரசியலையும் அம்பலப்படுத்தியிருக்கிறது. ஒன்றிய ஆட்சியும், குஜராத் ஆட்சியும் இணைந்து குற்றவாளிகளுக்கு சாதகமாக செயல்பட்டுள்ளனர் என்று கூறிய உச்சநீதிமன்றம் இதில் நடந்திருக்கிற மோசடிகளையும் சுட்டிக்காட்டியுள்ளது. இதில் ஃபிராடு நடந்திருக்கிறது என்று உச்சநீதிமன்றம் பயன்படுத்திய வார்த்தையை சுட்டிக்காட்ட வேண்டும்.

அது என்ன ஃப்ராடு? இந்த வழக்கு குஜராத்தில் இருந்து மகாராஷ்டிராவுக்கு மாற்றப்பட்டது. எனவே குற்றவாளிகளை முன்கூட்டியே விடுதலை செய்யும் முடிவு மகாராஷ்டிரா மாநில அரசுக்குத்தான் உண்டே தவிர குஜராத் மாநில அரசுக்கு சட்டப்படி கிடையாது. ஆனால் குஜராத் மாநில அரசு எப்படி இவர்களை முன்கூட்டியே விடுதலை செய்யமுடிந்தது? தண்டனை விதிக்கப்பட்ட ஒருவர் உச்சநீதிமன்றத்தில் ஒரு மனுவை தாக்கல் செய்கிறார். அந்த மனுவின் படி குஜராத் அரசுக்கு தங்களை விடுவிப்பதற்கான உரிமை இருக்கிறது என்று அந்த வழக்கில் அவர் வாதாடுகிறார். அதற்கு மாநில அரசும், ஒன்றிய அரசும் உடந்தையாக இருந்திருக்கிறது. குஜராத் அரசுக்கு தங்களை விடுவிக்கும் உரிமை உண்டு என்று வாதாடிய அந்த வழக்கில் பல உண்மைகளை மறைத்து நீதிமன்றத்தில் பல தகவல்களை தெரிவித்திருக்கிறார்கள்.

1992ம் ஆண்டு குஜராத் மாநில அரசின் முன்கூட்டிய விடுதலைக் கொள்கையின் படி, குஜராத் மாநில அரசுக்கு அந்த உரிமை உண்டு என்று நீதிமன்றத்தில் குற்றம்சாட்டப்பட்டவர் சார்பில் அரசு கூறியது. உண்மையில் 1992ம் ஆண்டு விதிக்கப்பட்ட அந்தக் கொள்கை பிறகு நீக்கப்பட்டுவிட்டது. காலாவதியான ஒரு கொள்கையை உயிரோடு இருப்பதாகக் கூறி உச்சநீதிமன்றத்தில் தவறான தகவல்களை தெரிவித்திருக்கிறது குஜராத் மாநில பாஜக அரசு. அதற்குப் பிறகு குஜராத் நீதிமன்றமே இரண்டுமுறை 1992 வது ஆண்டு கொள்கை காலாவதியாகிவிட்டதால் குற்றவாளிகளை விடுதலை செய்வதற்கான உரிமை மகாராஷ்டிர மாநில அரசுக்குத்தான் உண்டு, குஜராத் மாநில அரசுக்கு இல்லை என்று குஜராத் உயர்நீதிமன்றமே அளித்த தீர்ப்பையும் உச்சநீதிமன்றத்தில் தெரிவிக்காமல் குஜராத் மாநில அரசுக்கு உரிமை உண்டு என்று பொய்யைக் கூறி அந்த உத்தரவைப் பெற்றுள்ளனர். எனவே இதுவொரு ஃபிராடு என்று உச்சநீதிமன்ற நீதிபதிகள் கூறியுள்ளனர்.

அதுமட்டுமின்றி இவர்களை விடுதலை செய்யலாம் என்பதற்கான குழுவில் இருக்கிற ஒரு உறுப்பினர் "இவர்களெல்லாம் பிராமண வகுப்பைச் சேர்ந்தவர்கள், இவர்கள் குற்றங்களை ஒருபோதும் செய்திருக்க மாட்டார்கள்" என்று அதற்கான காரணத்தையும் அவர் கூறியிருக்கிறார். இப்போது நீதிமன்றத்தின் வழியாக இவர்களின் முகத்திரை கிழிந்து தொங்குகிறது. அதன் காரணமாகத்தான் கடந்த சில வாரங்களாக தொலைக்காட்சி விவாதங்களில் நேரடியாக பேசவந்த பாஜகவினர் நேற்று தலைதெரிக்க ஓடிவிட்டனர் என்பதை மக்கள் கவனிக்க வேண்டும்.

கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரனின் வாட்ஸ் ஆப் பதிவு (09.01.2024)

## நிர்மலாவின் பொய்யுரைகளுக்கு அமைச்சர் பதில்

*சென்னை மேற்கு மாம்பலத்தில் நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு பேசிய ஒன்றிய அமைச்சர் நிர்மலா சீதாராமன், 2014-2023 வரை ஒன்றிய அரசுக்கு தமிழ்நாடு வழங்கிய வரி ரூ.6.23 இலட்சம் கோடி. ஆனால் ஒன்றிய அரசு தமிழகத்துக்கு வழங்கிய நிதி ரூ.6.96 கோடி. தமிழ்நாட்டில் இருந்து பெற்ற வரியை விட கூடுதலான நிதியினை நாங்கள் வழங்கிவருகிறோம் என்று உண்மைக்கு மாறான தகவலைத் தெரிவித்துள்ளார். அதற்கு தமிழ்நாடு நிதியமைச்சர் தங்கம் தென்னரசு பதிலடி கொடுத்துள்ளார்.*

*கடுமையான நிதி நெருக்கடியில் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற திமுக அரசு, கொரோனா நிவாரண நிதியாக குடும்ப அட்டைகளுக்கு ரூ.4000, பெண்களுக்கு கட்டணமில்லா பேருந்து பயணம், அரசுப் பள்ளிகளில் படித்து உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதம்தோறும் ரூ.1000 கல்வி உதவித்தொகை, நிறைவேற்றவே முடியாது என்று எதிரிகளால் விமர்சிக்கப்பட்ட மகளிர் உரிமைத் தொகை, பொங்கல் பரிசாக ரூ.1000 என ஒன்றிய அரசின் எந்தவித ஒத்துழைப்புமின்றி தமிழ்நாடு அரசு தொடர்ந்து தனது திட்டங்களை செயல்படுத்திவருகிறது.*

*ஆனால் ஒன்றிய அரசு தமிழகத்தில் இருந்து வரியாக பெறும் ஒவ்வொரு ரூபாய்க்கும் 29 பைசாவை மட்டுமே திரும்ப வழங்குகிறது. பாஜக ஆளும் மாநிலங்களுக்கு வரியை விட கூடுதல் நிதியை ஒதுக்குகிறது ஒன்றிய பாஜக அரசு. உதாரணமாக 2014 - 2015ம் ஆண்டு முதல் 2022 - 2023ம் ஆண்டு வரை பாஜக ஆளும் மாநிலமான உத்தரப்பிரதேச மாநிலம் ரூ.2.23 லட்சம் கோடி ஒன்றிய அரசுக்கு வரி கொடுத்துள்ளது. ஆனால் ஒன்றிய அரசு உத்தர பிரதேசத்துக்கு ரூ.15.35 லட்சம் கோடியை திரும்ப வழங்கியுள்ளது. ஒன்றிய அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்களில், பிரதம மந்திரி வீடு கட்டும் திட்டத்தில் ஒன்றிய அரசு ரூ.72,000 கொடுக்கிறது. ஆனால், தமிழ்நாடு அரசு ரூ.1.68 லட்சம் கொடுக்கிறது. அதேபோல், நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு திட்டத்துக்கு ஒன்றிய அரசு ரூ.1,50 லட்சம் கொடுக்கிறது. ஆனால், தமிழக அரசு ரூ.7 லட்சம் தருகிறது.*

*மிக்ஜாம் புயல் மற்றும் தென்மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ள பாதிப்புகளுக்கு ஒன்றிய அரசு இதுவரை நிதி ஒதுக்கீடு செய்யவில்லை. ஆனால் தமிழ்நாடு அரசு வெள்ள நிவாரண நிதியாக ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ.6000 வழங்கியுள்ளது. ரூ.63,246 கோடி செலவில் நடைபெற்றுவரும் சென்னை மெட்ரோ 2வது கட்ட பணிகளுக்கு ஒன்றிய அரசு தனது பங்களிப்பாக 50 விழுக்காடு நிதியினை வழங்க வேண்டும். ஆனால் இதுவரை ஒரு ரூபாய் நிதி கூட ஒதுக்கவில்லை, முழுவதும் தமிழ்நாடு அரசின் நிதியிலிருந்து சென்னை 2ம் கட்ட மெட்ரோ பணிகள் நடைபெற்றுவருகிறது.*

*ஒன்றிய அரசிடம் கூடுதல் நிதியினைப் பெறும் பாஜக ஆளும் மாநிலங்கள், தொழில்வளர்ச்சி, கல்வி, வேலைவாய்ப்பு, நகர்ப்புற கட்டமைப்பு உள்ளிட்டவைகளில் இன்றுவரை பின்தங்கியே உள்ளது. ஆனால் ஒன்றிய அரசின் எந்தவித ஆதரவும் இல்லாமல் தமிழ்நாடு அரசு தனது சொந்த நிதியிலிருந்து பல்வேறு மக்கள்நலத் திட்டங்களை செயல்படுத்தி இந்தியாவின் முதன்மை மாநிலமாக திகழ்கிறது 'திராவிட மாடல்' தமிழ்நாடு!*

# சென்னை, திருப்பூரில் பொங்கல் விழா; ஏற்பாடுகள் தீவிரம்

திருவல்லிக்கேணி பகுதி 24ம் ஆண்டு தமிழ்ப் புத்தாண்டு மற்றும் பொங்கல் விழா விளையாட்டுப் போட்டிகள் இராயப்பேட்டை வி.எம்.தெருவில் நடைபெற்றது.

விளையாட்டுப் போட்டிகளை திராவிட முன்னேற்றக் கழக இளைஞரணி சென்னை மேற்கு மாவட்ட அமைப்பாளர் வழக்கறிஞர் பிரகாஷ் தொடங்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து குழந்தைகள் மற்றும் இளைஞர் - பெண்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன.

13.01.2024 சனிக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறும் விழாவில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, வணக்கத்துக்குரிய சென்னை மாநகராட்சி மேயர் பிரியா, திரைப்பட இயக்குனர் மாரி செல்வராஜ் உள்ளிட்டோர் சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்றுப் போட்டியில் வென்றவர்களுக்கு பரிசளித்து சிறப்புரையாற்றவுள்ளனர்.

மயிலாப்பூர் : மயிலாப்பூர் பகுதியில் 8ஆம் ஆண்டு பொங்கல் விழா விளையாட்டுப் போட்டிகள் ஜனவரி 07ம் தேதி சுப்பராயன் சாலையில் நடைபெற்றது. பரிசளிப்பு மற்றும் கலைநிகழ்ச்சிகள் ஜனவரி 15ஆம் தேதி நடைபெறும்.

வட சென்னை : தமிழர் திருநாள் மற்றும் பொங்கல் விழா விளையாட்டுப் போட்டிகள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் ஜனவரி 15ம் தேதி பச்சையப்பன் கல்லூரி பின்புறம் உள்ள வைத்தியநாதன் தெருவில் நடைபெறும்.

திருப்பூர் : திருப்பூர் மாவட்டக் கழக சார்பில் 14ஆம் ஆண்டு தமிழ்ப் புத்தாண்டு மற்றும் பொங்கல் விழா 21.01.2024 ஞாயிற்றுக்கிழமை திருப்பூர் மாஸ்கோ நகரில் நடைபெறுகிறது.

## இந்திய அரசியலும் பார்ப்பனியமும் - திருப்பூரில் கருத்தரங்கம்

திருப்பூர் : திருப்பூர் மாநகர கழக அமைப்பாளர் முத்து - வசந்தி இணையரின் மூத்த மகன் வெற்றிமாறனின் 4 ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா மற்றும் இளைய மகன் பெயர் சூட்டும் விழா 07.01.2024 ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு திருப்பூர் கிருஷ்ணா நகரில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்றது.

முதல் நிகழ்வாக வெற்றிமாறனின் பிறந்தநாள் கழகத் தலைவர் முன்னிலையில் கேக் வெட்டி மகிழ்ச்சியுடன் கொண்டாடப்பட்டது.

அடுத்ததாக வசந்தி - முத்து இணையரின் இரண்டாவது மகனுக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி அவர்கள் "மகிழ் மாறன்" என்று பெயர் சூட்டினார்.

பெயர் சூட்டு விழாவைத் தொடர்ந்து மாலை 6 மணிக்கு கருத்தரங்கம் நடைபெற்றது. கருத்தரங்கிற்கு முத்துலட்சுமி தலைமை தாங்கினார், சக்தி முன்னிலை வகித்தார், வசந்தி வரவேற்புரையாற்றினார்.

கழகத்தின் தலைமைக்குழு உறுப்பினர் சூலூர் பன்னீர்செல்வம், கோவை மாவட்டத் தலைவர் மேட்டுப்பாளையம் பா.இராமச்சந்திரன், கழக அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி, கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி, கழகப் பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

நிறைவாகக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, "இந்திய அரசியலும் - பார்ப்பனியமும்" என்கிற தலைப்பில் நிறைவுரையாற்றினார்.

கருத்தரங்கை திருப்பூர் மாவட்டத் தலைவர் முகில்ராசு தொகுத்து வழங்கினார். மாநகர அமைப்பாளர் முத்து நன்றி கூற கருத்தரங்கம் நிறைவுபெற்றது.பிறந்தநாள் விழா - பெயர் சூட்டு விழாவின் மகிழ்ச்சியாக வசந்தி - முத்து இணையரின் மூத்த மகன் வெற்றிமாறன் தான் சேமித்து வைத்திருந்த ரூ.3000-யை கழக வார ஏடான "புரட்சிப் பெரியார் முழக்கம்" வளர்ச்சி நிதியாகக் கழகத் தலைவரிடம் வழங்கினார்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : January 12, 2024

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran